






# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 1 இதழ் 40 1.10.2025



ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

*****************************

# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய முத்துக்கள் உபதேசங்கள்

# முத்துக்கள்

**ஸ்ரீ சௌனக முனி அருளிய ஸ்ரீ விஷ்ணு தர்மம்**

கலங்கிய நீருடைய குட்டையில் அன்னம் வஸிக்குமா? அதைப் போல- காமக்ரோதங்களால் கலங்கின மனதில் பகவான் வஸிக்கமாட்டார்:-

"रागादिदूषिते चित्ते नास्पदी मधुसूदनः ।
न बघ्नाति रतिं हंसः कदाचिन् कर्दमाम्भसि ।।" (sloka10)

Chapter 9....Sri Vishnu dharmam

எம்பெருமானைத் துதிக்கும் நாக்கே நாக்கு. ஸ்ரீ ஹரியை பூஜிக்கவே நமக்கு காலங்கள் அமைந்துள்ளன -

सा जिह्वा या हरिं स्तौति यौ तत्पूजाकरौ करौ என்றுது காண்க.

ஒரு க்ஷண காலமும் ஸ்ரீ வாஸுதேவனை எண்ணாமல் நமக்குக் கழிந்ததானால் அதுவே பேரிழவு -அதுவே விக்னம், அதுவே விகாரம்-

यन्मुहूर्त क्षणं वाऽपि वासुदेवो न चिन्त्यते ।
सा हानिः तन्महत् छिद्रं, सा भ्रान्तिः, साच विक्रिया - endraar ithai

Sri Vishnu dharmam ch 1

6வது அத்யாயம்

ஸ்ரீ விஷ்ணுவைப் பற்றிய தர்மங்களைக் கேட்பதே பரமபாவனம் என்று சௌனகர் யுதிஷ்டிரனுக்குக் கூறுவது. வஸிஷ்டர், பராசரர், ஆத்ரேயர், கார்க்யர், சங்கர், லிகிதர், ஜாபாலி, த்வைபாயனர், உமாமஹேஸ்வரர்கள், காய்யபீயம், பஹ்வாயனம், சாகுனேயம், ஆகஸ்த்யம், மௌத்கல்யகீதை, சாண்டில்யம், ஸௌரபேயம், ப்ருகு -அங்கிரஸ் கூறியவை, காஸ்யபம், உத்தாலகம், ஸௌமந்தவம், உக்ராயணம், பிசங்கம், ஐந்த்ரம், வாருணம், கௌபேரம், வாத்ஸ்ய பௌணகம், ஆபஸ்தம்பீயம், ஹாரீதகம், யாஜ்ஞவல்க்யம், ஸப்தர்ஷி தர்மங்கள், இவ்வளவையும் அடியேன் (யுதிஷ்டிரன்) கேட்டிருக்கிறேன். ஆயினும் தேவரீரிடமிருந்து (சௌனகர்) கேட்க விரும்புகிறேன்- என்றார். இத்தனை பேர்களுக்கு மேல் தர்ம சாஸ்த்ரம் அருளியுள்ளார்கள் -

என்பதைக் காட்ட ஒன்று விடாமல் அவைகளை இங்கு அடியேன் எழுதினேன்.

*******************************************************

62வது அத்யாயம்

யவம் -பூமிதான பலன்கள், இனி, கரும்பு -வாழை கோதுமை -நெல் முதலியன விளையக் கூடிய உயர்ந்த -நீராதாரமுள்ள பூமியைக் கொடுக்கவும். இதில் வரும்
“आस्फोटयन्ति पितरः प्रवल्गन्ति (प्रनृत्यन्ति) पितामहाः ।
भूमिदो (वैष्णवो) नः कुले जातः स नः सन्तारयिष्यति" (62-265.) ந
சுலோகம் சிறிது மாறி பாடத்துடன் ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் உதாஹரித்தது, முறைப்படி தானம் கொடுத்த பூமியை -ஒரு துராத்மா ஏழையிடமிருந்து பலாத்காரமாய் பிடுங்கிக் கொண்டானேயாகில் - அவன் - நீரே இல்லாத விந்த்ய மலைக் காட்டில் பட்டுப் போன மரத்தில் துஷ்டமான பாம்பாகப் பிறப்பான்.

*******************************************************

70வது அத்யாயம்

அந்திம காலத்தில் ஜபிக்க வேண்டிய மந்த்ரம் என்ன? எதை நினைத்துக் கொண்டிருக்க வேண்டும்? என்று சதானீகர் கேட்க அவருக்கு சௌனகர் கூறும் விதமா அமைந்தது இந்த அத்யாயம். அதே கேள்வியை எம்பெருமானிடம் நாரதர் கேட்க, அதற்கு எம்பெருமான் அருளிய பதிலையே உனக்குக் கூறுகிறேன் என்று சதானீகருக்கு சௌனகர் கூறுகிறார்.

முதலில் 1 என்ற மந்த்ரத்தைக் கூறியதும், மேல்
ॐ अव्यक्तं शाश्वतं देवम् अनन्तं पुरुषोत्तमम् ।
प्रपद्ये प्राञ्जलिर्विष्णुम् अच्युतं (9 சு.) என்று தொடங்கி
परमेश्वरम् ब्रह्मेशानादयः प्रभुम् ।
निश्चयं नाधिगच्छन्ति तमस्मि शरणं गतः

(சு.24 இந்த சுலோகம் ஸ்ரீ தேமிகன் எடுத்து உதாஹரித்தது)-

**त्वन्मना; त्वद्गत प्राणः त्वद्भक्तः त्वत्परायणः ।**
**त्वामेवानुस्मरे देव ! मरणे प्रत्युपस्थिते (5. 42) (2 5 எண்ணி, உன்னையே ப்ராணனாகக் கொண்டு, உன் பக்தனாகி, நீயே மிக உயர்ந்த வழி காட்டி எனக் கொண்டு, மரண காலத்தில் உன்னையே எண்ணி வர அருளாய்), என்பதுவரை ப்ரார்த்தித்து பிறகு எல்லாவகை நோய்களும் நீங்க வேண்டுகிறாம்.**

**எனக்கு கடன் கூடாது. விழித்திருக்கும் போதும், ஸந்த்யாகாலங்களிலும் எவன் இந்த அத்யாயத்தில் தெரிவித்தபடி பகவானையே எண்ணி வருகிறானோ - அவன் பகவானையே அடைகிறான் - என்று முடிக்கிறார்.**

*******************************************************

